**சார்பு நீதிமன்றம், போளூர்**
**முன்னிலை– திரு. S.செந்தில்பாபு, எம்.ஏ.எம்.எல்.,**
**சார்பு நீதிபதி, போளூர்,**
**2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 11–ஆம் நாள் செவ்வாய்கிழமை**
**I.A.No.3/2025 in O.S.No:495/2022**

சுந்தராம்பாள் ... மனுதாரர்/வாதி

//எதிர்//

1. சிலம்பு அம்மாள்
2. சேட்டு
3. சங்கர்
4. பவுனும்மாள்
5. குமாரி (நீத்தார்) ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
6. தருமன்
7. ஜெயபிரியா
8. தெய்வநாயகி
9. மைனர்.பிரகாஷ்

9ம் மைனருக்காக அவரது நண்பர்/பாதுகாவலர்/
அவரது தந்தை 6ம் கணிக்கப்பட்ட எதிர்மனுதாரர் ...கணிக்கப்பட்டஎதிர்மனுதாரர்கள் /அவசியதரப்பினர்கள்

இம்மனு என் முன்னர் 28.10.2025–ம் தேதியன்று முடிவாக விசாரணைக்கு கொண்டுவரப்பட்டு, மனுதாரர்/வாதிக்காக வழக்கறிஞர் திரு.K.சுப்பிரமணியன் அவர்களும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்காக வழக்கறிஞர் திரு.T.செம்பியன் அவர்கள் முன்னிலையாகி, இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு, ஆவணங்களை பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனைக்குட்பட்டு, இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு பிறப்பிக்கும்.

## ஆணையுரை

இம்மனுவில் 5ம் எதிர்மனுதாரர் குமாரி என்பவர் கடந்த 06.04.2021 அன்று காலமாகிவிட்டதால் அவரது சட்டப்படியான வாரிசுகளை வழக்கின் தரப்பினராக சேர்க்க கோரி தாக்கல் செய்யும் மனுவில் ஏற்பட்ட 1246 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து மனுவை அனுமதிக்குமாறு மனுதாரரால் காலவரையறைச்சட்டம் பிரிவு 5ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **மனுதாரர்/வாதியின் ஆணையுறுதி வாக்குமூலத்தின் சுருக்கம்: –**

அசல் வழக்கில் வாதிகள் பிரதிவாதிகள் மீது பாகபிரிவினை கோரி தாக்கல் செய்து மேற்படி வழக்கு நிலுவையில் இருந்து வந்த நிலையில் 5ம் எதிர்மனுதாரரான குமாரி என்பவர் 6 முதல் 9 வரையிலான எதிர்மனுதாரர்களை வாரிசுதாரர்களாக விட்டுவிட்டு இறந்து விட்டார். அதனால் அவர்களை இவ்வழக்கின் தரப்பினர்களாக சேர்க்க வேண்டியது அவசியம் என்ற நிலையில் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாததால் பெங்களூரில் மருத்துவ சிகிச்சை பெற்று வந்ததால்

தகுந்த காலத்திற்குள் மனு செய்ய இயலவில்லை. எனவே, மனுவில் ஏற்பட்ட 1246 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து மனுவை அனுமதிக்குமாறு உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்</u>

கடந்த 06.04.2021 இம்மனுவின் 5ம் எதிர்மனுதாரரான குமாரி என்பவர் இறந்து விட்டதாக தெரிவிக்கப்படுகிறது உண்மையானது. மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாமல் மருத்துவ சிகிச்சை எதுவும் பெறவில்லை. 5ம் பிரதிவாதி இறந்துவிட்ட விவரம் மனுதாரருக்கு நன்கு தெரியும். ஆனால் அக்காரணத்தால் காலதாமதாக இம்மனுவினை தாக்கல் செய்திருப்பதாக தெரிவித்திருப்பது பொய்யான சங்கதியாகும். மேலும், 5ம் பிரதிவாதி இறந்து 4 வருடங்கள் கழித்து மனுதாரர் இவ்வெதிர்மனுதாரர்களை அலைகழிக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் வேண்டுமென்றே காலதாமதமாக இம்மனுக்களை தாக்கல் செய்துள்ளார் எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்று.

3. இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? என்பதே ஆகும்.

4. இருதரப்பிலும் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் ஏதுவும் அளிக்கப்படவில்லை. இருதரப்பு வாதங்களும் கேட்கபட்டன.

5. மேற்கண்ட இருதரப்பு வாதுரைகளையும், வழக்கு ஆவணங்களையும், நன்கு ஆராய்ந்து பரிசீலனை செய்ததில், வழக்கு நிலுவையில் இருந்து வந்த நிலையில் 5ம் எதிர்மனுதாரரான குமாரி என்பவர் 6 முதல் 9 வரையிலான எதிர்மனுதாரர்களை வாரிசுதாரர்களாக விட்டுவிட்டு இறந்து விட்டார் என்பது இருதரப்பினராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாகும். மேலும், எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவினை அனுமதிப்பதற்கு கடுமையான ஆட்சேபனை ஏதும் தெரிவிக்கப்படவில்லை. இந்த வழக்கு பாகபிரிவினை கோரி தாக்கல் செய்துள்ள நிலையில் தாவா சொத்துரிமையை முடிவு செய்ய இறந்த 5ம் பிரதிவாதியின் வாரிசுகள் இந்த வழக்கிற்கு அவசிய தரப்பினர் என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. மேலும், இந்த மனுவை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட நஷ்டம் ஏற்பட வாய்ப்பில்லை என்பதால் இம்மனுவை அனுமதிப்பதே நீதியின்பாற்பட்டதாகும் என்று தீர்மானித்து அவ்வாறே இந்த பிரச்சனைக்கு விடையளிக்கிறது.

6. இறுதியாக, இம்மனுவை அனுமதித்து, இவ்வழக்கின் 5ம் பிரதிவாதி குமாரியின் சட்டப்படியான வாரிசுகளை வழக்கின் தரப்பினராக சேர்க்க கோரி தாக்கல் செய்யும் மனுவில் ஏற்பட்ட 1246 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் நேரில் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

S SENTHILBABU
Digitally signed by S SENTHILBABU
Date: 2025.11.11 15:20:55 +0530

**சார்பு நீதிபதி,**

**போளூர்.**